ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2295/16 – 2022 අගෝස්තු මස 31 වැනි බදාදා – 2022.08.31
2295/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

**2022 ஆம் ஆண்டின் 134 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/15/2017/VE/46.
பி. செ. கு. இல. : THI/LND/L2/ACQVI/140.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ் விபரிக்கப்பட்டுள்ள அட்டவணையின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்ணாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, யூன் 30.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், திஹகொட.

2. **காணியின் விபரம்**: தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் இல 333, உடுவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அந்தலெத்துவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2019.09.03 ஆந் திகதிய மாற 2814 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் பின்வரும் காணித் துண்டின் எல்லைகள்:

**01. துண்டு இல. 1 - மானிகெவத்தை அல்லது மானகேவத்தை - விஸ்தீரணம்: 0.4821 ஹெக்டயார்**

வடக்கு : கஹதூவ போத்துவகே யசரத்ன சுமனவர்தன மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் அல்லது உக்கொடகெவத்தை அல்லது பிம்பிரிகஹஹேன ; கிழக்கு : வீதி மற்றும் விஜேசிங்ஹ விமலா மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் தொட்டுபொலகெவத்தை அல்லது தொட்டுபொலகாவவத்தை; தெற்கு : வீதி ; மேற்கு : வீதி மற்றும் கஹதூவ போத்துவகே யசரத்ன சுமனவர்தன மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் உக்கொடகெவத்தை அல்லது உக்கொடகெவத்தை அல்லது பிம்பிரிகஹஹேன.

EOG 08 - 0288